1981 ஏப்ரல் 4]

ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால், இதுவரையிலே ஏற்கனவே இருந்த பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு அறிவிப்பைத் தந்திருக்கிறார்கள். அதை நான் எடுத்துப் படித்தேன்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தாங்கள் சொல்கிற கருத்திலே மாறுபாடு இல்லை. ஆனால், இன்னொரு அறிக்கை, அமைச்சர் பெயராலேயும் வைக்கப்பட்டிருக்கிறது. திரு. செ. அரங்கநாயகம், பெயராலே, கல்வி அமைச்சர் பெயராலே, ஆனால் அறிக்கைகள் அமைச்சர் பெயராலேயும் வைக்கப்படும், செயலாளர் பெயராலேயும் வைக்கப்படும் என்றால், அப்புறம் எதிர் காலத்திலே துணைச் செயலாளர் பெயராலேயும் வைக்கப்படுகிற நிலையும் வரக்கூடும். எனவே, அவையினுடைய கண்ணியத்தை, மதிப்பை அதேபோல அமைச்சருடைய பொறுப்பைக் காப்பாற்றிக் கொள்வதற்கு ஏதுவான வழிமுறையைத் தாங்கள் கண்டறிய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் துணைத் தலைவருடைய கருத்தை ஏற்றுக் கொண்டு நான் அதைப் பற்றி பரிசீலித்து விரைவிலே அறிவிக்கிறேன்.

வேடந்தவாடியிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி.

*வினா எண். 639—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், துரிஞ்சாபுரம் ஒன்றியம், வேடந்தவாடி கிராமத்தில் மேல்நிலை நீர்த் தேக்க தொட்டி கட்டும் வேலை துவக்கப் பெற்று முடிவு பெறாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணியை முடிவுற செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) வேடந்தவாடி கிராமத்தில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் வேலை ரத்து செய்யப்பட்டு ஒரு தரை மட்ட நீர்த் தேக்கத் தொட்டிக் கட்ட தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[முற்பகல் 9·40.]

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, வேடந்தவாடி கிராமத்தில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் வேலை ஆரம்பிக்கப்பட்டு, பேஸ்மென்ட் வரையில் போடப்பட்டு இருக்கிறது. அந்த கிராமத்தில் கிட்டத்தட்ட

3,000 மக்கள் இருக்கிறார்கள். அங்கே தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டி கட்டினால் அந்த மக்களுடைய தேவைக்குப் போதாது. ஆகவே, அதை மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி யாகக் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்தகைய நடவடிக்கையை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே ஏற்கனவே ஒரு மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டி கட்டு வதற்காக ஊராட்சித் தலைவரிடத்தில் ஒப்படைக்கப்பட்டு, அந்த வேலை செய்யப்படாமல், ஒரு பகுதி வேலை செய்ததற் காக ரூ. 1,726 பெற்று இருக்கிறார். அந்த வேலையை அப்படியே நிறுத்திவிட்ட காரணத்தால் மீண்டும் தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டி கட்டுவதற்கு ரூ. 20,000 ஒதுக்கப்பட்டு அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, சீக்கிரம் முடிக்கப்பட்டுவிடும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, ஏற்கனவே அங்கே மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டு வதற்காக பேஸ்மென்ட் வரையில் வேலை நடந்து இருக்கிறது. எவ்வளவு பணம் கொடுத்தார்கள் என்கிற விவரம் எனக்குத் தெரியாது. தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டி அந்த கிராமத்து மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது என்கிற காரணத்தால், அதை மாற்றி மேல்நிலைத் நீர்த் தேக்கத் தொட்டி கட்டித் தருகிற வகையில் அந்தத் திட்டத்தை மாற்ற வேண்டும். அப்போதுதான் பொதுமக்களுக்கு வேண்டிய தண்ணீர் கிடைக்கும். ஆகவே, அந்தத் திட்டத்தை மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் திட்டமாக மாற்ற அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஊராட்சியின் நிதிநிலையைப் பொறுத்து பரிசீலிக்கப்படும்.

அகரம்—சிகூர் அருகே வெள்ளாற்றின் குறுக்கே பாலம்.

*வினா எண் 640—திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி—தென்னாற்காடு மாவட்டத்தை இணைக்கும் வகையில் அகரம்—சிகூர் அருகில் ஓடும் வெள்ளாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த வேலை எப்பொழுது துவக்கப்படும்?